DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **அமலி கிரேஸி** |
| Huspand Name | : | லெவே ஜெரால்டு பாபு |
| Village | : | காளையார்கோவில் |
| Taluk | : | காளையார்கோவில் |
| Calling | : | அரசுப்பள்ளி தையல் ஆசிரியர் |
| Religion | : | கிறிஸ்தவர் |
| Age | : | 40/2025 |

**(வழக்கின் 1 மற்றும் 3 ம் எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.02.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது காளையார்கோவில் விஜபி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மேலச்சாலூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் தையல் ஆசிரியாராக நான் வேலை பார்த்து வருகிறேன். சாட்சி லெவே ஜெரால்டு பாபு எனது கணவர். சாட்சிகள் ஜோபின், ஜெர்லின் ஆகியோர் எனது அண்ணன் ஜேக்கப் ஜெயபாரி என்பவர் மகன் மற்றும் மகள் ஆவார். சாட்சிகள் உபகார மேரி, சின்னப்பன் ஆகியோர் எனது பெற்றோர்கள் ஆவார். எனக்கு இரண்டு அண்ணன் செல்வக்குமார் மற்றும் ஜேக்கப் ஜெயபாரி ஆவார். என் அண்ணன் இருவரும் துபாய் அபுதாபியில் வேலை பார்த்து வருகிறார். எனது பெற்றோரும் கல்லுவழியில் குடியிருந்து வருகிறார்கள். எனது பெற்றோர் எனது அண்ணன் ஜேக்கப் ஜெயபாரி குழந்தைகளையும் எனது அண்ணி பார்த்து வருகிறார். எனது இளைய அண்ணன் செல்வக்குமாரின் மனைவி மற்றும் அவரது

குழந்தைகள் ராயப்பன்பட்டியில் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 25.01.2024 ம் தேதி இரவு 9.30 மணியளவில் கல்லுவழியில் எனது பெற்றோர் மற்றும் அவர்களுடன் குடியிருக்கும் எனது அண்ணி மற்றும் அவரது குழந்தைகளை பார்த்துவிட்டு பின்பு 26.01.2024 ம் தேதி காலை சுமார் 7.00 மணியளவில் எனது அண்ண மகன் ஜோபின் என்பவர் போன் மூலமாக வீட்டில் உள்ள அனைவரையும் யாரோ இரும்பு ராடால் தாக்கி காயப்படுத்தி வீட்டில் இருந்த நகைகளை எடுத்துச்சென்றுவிட்டதாக தகவல் தெரிவித்தார். உடனே நானும் என் கணவரும் கல்லுவழியில் உள்ள எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் வண்டியை நிறுத்திவிட்டு பார்த்தபோது வீட்டின் முன்னால் எனது அப்பா சின்னப்பன் காயங்களுடன் கிடந்தார். அவரை தூக்கி வீட்டிற்கு கொண்டு வந்தோம். அப்போது வீட்டிற்குள்ளிருந்து எனது அண்ணன் மகன் ஜோபின் தலையில் ரத்த காயத்துடன் வந்தார். அவனையும் என் அப்பாவுடன் நான் உட்கார வைத்தேன். நான் என் கணவரும் வீட்டில் ஹால் பகுதியில் சென்று பார்த்தபோது எனது அ ம்மாவும் ஜெர்லினும் த லையில் அடிப்பட்டு ரத்தக்காயங்களுடன் இருந்தார்கள். அவர்களுக்கு உயிர் இருந்ததா என்று தட்டி பார்த்தோம். உயிர் இருப்பது தெரிந்த அங்கே இருக்கவைத்தோம். மேலும் பெட் ரூம் சென்று பார்த்தபோது எனது அண்ணி தலையிலும் கையிலும் அடிப்பட்டு கட்டிலுக்கு கீழே கிடந்தார். மேலும் வீட்டின் இருந்த பீரோ மற்றும் கபோர்டு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த பொருட்கள் சிதறிக்கிடந்தது. பின்பு நானும் எனது கணவரும் அருகில் குடியிப்பவர்களான ஆரோ'க்கியமேரி. மரியம்மாள், சாந்தி இந்துமதி ஆகியோர்களை உதவிக்கு அழைத்து 108 ஆம்புலன்சு மூலமாக எனது பெற்றோரை காளையார்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மற்ற காயம்ப,ட்ட எனது அண்ணி மற்றும் அவரது குழந்தைகளை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அ னுப்பி வைத்தோம். அதன்பிறகு எனது பெற்றோர் மற்றும் எனது அண்ணி மற்றும் அவரது குழந்தகளை மதுரை வேலம்மாகள் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். எனது அண்ணிக்கு 29.01.2024 ம் தேதி எனது மயக்கநிலை தெளிந்தது. காளையார்கோவில் போலிசார் விசாரணை செய்தார்கள். அப்போது 10 பவுன் தாலி செயின் ஒன்று, 5 பவுன்

தங்கசெயின் ஒன்று, 3 பவுன் எடையுள்ள கல் வைத்த நெக்லஸ் ஒன்று, 2 பவுன் எடையுள்ள கல் வைத்த 2 ஜோடி ஜிமிக்கி, சுமார் 2 பவுன் எடையுள்ள நவரத்தின மோதிரம் ஒன்று, 1 ஜோடி ஜிமிக்கி, அரை பவுன் தோடு ஒன்று ஆக மொத்தம் 23.1/2 பவுன் கொள்ளையடிக்கப்பட்டதாக எனது அண்ணி தெரிவித்தார். கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் மதிப்பு ரூ.7,05,000/- ஆகும். பின்பு 26.01.2024 தேதி நான் வழக்கு சம்மந்தமாக காளையார்கோவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். 26.02.2024 ம் தேதி காளையார்கோவில் காவல்நிலைய போலிசார் எனது பெற்றோர் வீட்டில் கொள்ளைடித்தவனை பிடித்து வைத்திருப்பதாகவும் அவன் பெயர் தினேஷ்குமார் என்று தெரிவித்தார்கள். அதன் பிறகு 27.02.2024 ம் தேதி காளையார்கோவில் காவல்நிலையம் சென்று வழக்கு சம்மந்தமாக நகைகளை நான் அடையாளம் காட்டினேன். காவல்நிலையத்தில் சுமார் 8.1/2 பவுன் எடையுள்ள குண்டு செயின் ஒன்று, ஒன்னே முக்கால் பவுன் எடை,யுள்ள ஜிமிக்கி ஒன்றை எனது அண்ணியின் நகைகள் என்று நான் அடையாளம் காட்டினேன். சுமார் 67 கிராம் எடையுள்ள குண்டு வைத்த வெளிநாட்டு செயின் புகைப்படம் **அ.சா.பொ. 1** ஆகும். சுமார் 12.6 கிராம் எடையுள்ள டிசைன் தங்க செயின் ஒன்று அ.சா.பொ. 1 புகைப்படத்தில் உள்ளது. ஒரு ஜோடி தங்க ஜிமிக்கி 9.38 கிராம் எடையுள்ளது அ.சா.பொ. 1 புகைப்படத்தில் உள்ளது. முருக்கு செயின் 16 கிராம் எடையுள்ளது அ.சா.பொ. 1 புகைப்படத்தில் உள்ளது. காவல்நிலையத்தில் என்னிடம் காட்டப்பட்ட புகைப்படத்தில் உள்ள பணம் ரூ.500/- நோட்டுக்களாக உள்ளது **அ.சா.பொ. 2** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போன் மூலமாக தகவல் தெரிந்தது அந்த இரு போன் எண்களையும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணைக்கு போனை கொடுத்தோம். காலை 7.00 மணிக்கு தகவல் தெரிந்து 7.10 மணிக்கு சென்றுவிட்டோம். நான் இருசக்கரவாகனத்தில் சென்றேன். எங்கள் ஊருக்கும் எனது பெற்றோர்களின் ஊருக்கும் சுமார் 20 கி,மீ தூரம் இருக்கும். நான்

செல்வதற்கு முன்பு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் வந்து பார்த்தார்களா என்றால் இல்லை. அக்கம்பக்கத்தில் யாருமில்லை நான் போய் சத்தம்போட்டபின் தான் வந்தார்கள். நான் சென்று கத்தியபின்பு தான் ஊர் ஆட்கள் போலிசாருக்கு போன் செய்தார்கள். போலிசார் வந்து விசாரித்தார்கள். எனது அ.த.சா.1 புகாரில் யாரென்று தெரியாது நபர்தான் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது அண்ணி மயக்க நிலையில் இருந்தார். அடையாளம் காட்டிய நகைகள் சந்தையில் கிடைக்கும் என்றால் சரிதான். நகைகள் எல்லாம் எனது அண்ணியின் நகைகள் தான் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரியை பற்றி கேள்விப்பட்டதாக சொல்வதும் வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சா ட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**அரசு தரப்பில் மறு விசாரணை**:

நான் காளையார்கோவில் காவல்நிலையம் சென்றபோது காவல்நிலையத்தில் 1 ம் எதிரியை நான் பார்த்தேன்.

**1 ம் எதிரி தரப்பில்குறுக்கு விசாரணை**:

போலிசார் சொல்லித்தான் 1ம் எதிரி எனக்கு அடையாளம் தெரியும் என்றால் ஆமாம்.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.02.03 06:42:09 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.